**செய்தி வெளியீடு எண்:371** **நாள்:22.5.2008**

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பணிகள்

## அதிகாரிகள் முன்னிலையில் முதலமைச்சர் கலைஞர் ஆய்வு செய்தார்.

தமிழக அரசு நிறைவேற்றிவரும் திட்டங்கள், அவற்றின் மூலம் மக்கள் அடையும் பயன்கள் ஆகியன குறித்தும், செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுதல் குறித்தும் துறைவாரியாக அமைச்சர்கள், அதிகாரிகள் முன்னிலையில் ஆய்வு செய்யும் பணிகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (22.5.2008) தொடங்கினார்.

முதலாவதாக இன்று கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின்போது கூட்டுறவு அமைச்சர் திரு. கோ.சி. மணி, உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு, தலைமைச் செயலாளர், அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசி போன்ற பொருள்களின் தற்போதைய தரம், கையிருப்பு ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன. அடுத்துவரும் மூன்றரை மாதத் தேவைகளை நிறைவு செய்யும் அளவில் தற்போதைய அரிசிக் கையிருப்பு போதுமானதாக உள்ளது என்றும், இதே நிலையை தொடர்ந்து கடைப்பிடித்து போதுமான அரிசி கையிருப்பில் வைக்கப்பட வேண்டுமென்றும், கிலோ அரிசி 2 ரூபாய்த் திட்டத்திற்குத் தங்குதடையின்றி அரிசி வழங்கப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுறுத்தினார்.

கள்ளச்சந்தை தடுப்புச் சட்டத்தில் 2006ல் 68 பேரும், 2007ல் 59 பேரும், 2008ல் மே 15 வரை 45 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்; அரிசி கடத்தலில் ஈடுபட்ட 10 வாகனங்களின் வாகனப் பதிவுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் மேலும் கடுமையாக்கப்பட்டு, கடத்தல் நடவடிக்கையில் ஈடுபடுபவர் யாராக இருந்தாலும், எவ்வித தயக்கமுமின்றி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அரிசி கடத்தலுக்கு உடந்தையாகச் செயல்படும் பணியாளர்கள் மீதும், மேற்பார்வை செய்யத் தவறிய அலுவலர்கள் மீதும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுரைகள் வழங்கினார்.

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்றவை தங்குதடையின்றி வழங்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அறிவுறுத்தினார், தற்சமயம் 25 விழுக்காடு அட்டைதாரர்கள் இப்பொருள்களை வாங்குகின்றனர். ரவா, மைதா ஆகியவைகளை மீண்டும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்க வட மாநிலங்களிலிருந்து கோதுமையை நேரடியாகக் கொள்முதல் செய்யவும், அதனை அரவை செய்து பொதுமக்களுக்கு வழங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

விலைவாசியைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக 19.4.2008 அன்று முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீதான தொடர் நடவடிக்கைகளும் ஆய்வு செய்யப்பட்டன. கோதுமை, பயறு வகைகள்

மீது கட்டுப்பாட்டு ஆணைகள் போடப்பட்டு, பதுக்கல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எண்ணெய், எண்ணெய் வித்துக்கள் மற்றும் அரிசி போன்ற பொருட்களுக்கு இருப்பு வைத்திருப்பதற்கான கட்டுப்பாட்டு ஆணைகள் துரிதமாக வெளியிடப்பட்டு பதுக்கல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பயறு வகைகளின் விலைவாசியை கட்டுப்படுத்த மியான்மர் சென்ற அதிகாரிகள் குழுவின் பரிந்துரைகளை ஏற்று உலக அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரி பயறு வகைகளை இறக்குமதி செய்யவும் அரசு ஆணையிட்டுள்ளது. மத்திய அரசு மூலம் இறக்குமதி செய்யப்பட்டு, அடுத்த மாதம் முதல் நியாயவிலைக் கடைகள் வாயிலாக வழங்கப்படவுள்ள 15500 மெட்ரிக் டன் பாமாயிலை, மாநில அரசு தற்போது வழங்கும் லிட்டர் 40 ரூபாய் என்ற விலையிலேயே தொடர்ந்து வழங்கிட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுரை வழங்கினார்.

பொது மக்களுக்கான அன்றாட சேவைகள், குறிப்பாக குடும்ப அட்டையில் உள்ள மாற்றங்கள், திருத்தம் போன்றவை கணினி மூலமே செய்வதற்கு ஏதுவாக வரும் செப்டம்பர் முதல் நேரடி வலைதள சேவை தொடங்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

கூட்டுறவுத் துறையில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 12,500 கோடியையும், அதில் பயிர்க் கடனுக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.1500 கோடியையும் மிஞ்சும் வகையில் கூட்டுறவு வங்கிகள் சீரமைக்கப்பட்டு செயல்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுறுத்தினார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பல ஆண்டுகளாகப் பொதுமக்களுக்குத் திரும்ப வழங்கப்படாமல் இருந்த 170 கோடி ரூபாய் வைப்புத் தொகை முழுமையாக திருப்பி வழங்கப்பட்டதை முதலமைச்சர் கலைஞர் பாராட்டினார்.

வேளாண் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கங்களில் 2005–2006ல் 39 சங்கங்களே இலாபம் ஈட்டிய நிலையில் 2007–08ல் 92 சங்கங்கள் இலாபம் ஈட்டிய நிலைக்கு உயர்ந்துள்ளதைப் பாராட்டியதோடு மற்ற சங்கங்களும் இந்த ஆண்டு இலாபம் ஈட்டும் சங்கங்களாக மாற்றப்பட வேண்டுமென்றும் உத்திரவிட்டுள்ளார். கூட்டுறவு வங்கிகள் செயல்பாடுகளை நவீனமயமாக்கவும் அவற்றைச் சீரமைத்து கண்காணிக்கவும் இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்க ஆணையிடப்பட்டுள்ளது.

நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கும் போது எடைக்குறைவை முழுமையாக அகற்ற அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் மின்னணுத் தராசு நிறுவும் திட்டத்தை 31.7.2008க்குள் முடித்திட அறிவுறுத்தினார்.

கூட்டுறவு அமைப்புகள் அவை தொடங்கப்பட்ட நோக்கங்களை விட்டு விலகிச்செல்லாமல் அவற்றின் முக்கிய நோக்கங்களைப் பின்பற்றி பொதுமக்கள் பயன்பெறத்தக்க வகையில் துறை அலுவலர்களும் பணியாளர்களும் தொண்டாற்றிட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் கேட்டுக் கொண்டார்.

* * *

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**